www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

T

# முதல் திருப்புதல் பொதுத் தேர்வு - 2025

## பன்னிரெண்டாம் வகுப்பு

## வணிகவியல்

பதிவு எண்: | | | | | | |

நேரம்: 3.00 மணி  மதிப்பெண்கள்: 90

### பகுதி - I

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.
சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக: 20×1=20

1) மேலாண்மை என்பது ............ன் செயல் ஆகும்.
அ) மேலாளர் ஆ) கீழ்ப்பணியாளர் இ) மேற்பார்வையாளர் ஈ) உயரதிகாரி

2) ............ன் உதவியுடன் இலக்குகள் அடையப்படுகின்றன.
அ) செயலூக்கமளித்தல் ஆ) கட்டுப்படுத்துதல்
இ) திட்டமிடுதல் ஈ) பணியமர்த்துதல்

3) குறியிலக்கு மேலாண்மை ............ செயற்முறையின் முதல்நிலை எது?
அ) முக்கிய முடிவு பகுதியை நிர்ணயிப்பது
ஆ) நடவடிக்கைகளை மதிப்பீடு செய்வது
இ) குறிக்கோள்களுடன் வளங்களைப் பொருத்துவது
ஈ) அமைப்பின் குறிக்கோள்களை வரையறுப்பது

4) நிதிச்சந்தை வணிக நிறுவனங்களுக்கு ............ உதவுகிறது.
அ) நிதிகளைத் திரட்டுவதற்கு ஆ) பணியாட்களை தேர்வு செய்வதற்கு
இ) விற்பனையை அதிகரிப்பதற்கு ஈ) நிதித் தேவையை குறைப்பதற்கு

5) மூலதனச் சந்தையின் பங்கேற்பாளர் ............ ஆவர்.
அ) தனிநபர் ஆ) நிறுமங்கள் இ) நிதி நிறுவனங்கள் ஈ) மேலே உள்ள அனைத்தும்

6) பணச்சந்தையில் முக்கிய பங்காற்றும் அமைப்பு ............
அ) வணிக வங்கி ஆ) இந்திய ரிசர்வ் வங்கி
இ) பாரத ஸ்டேட் வங்கி ஈ) மைய வங்கி

7) ............ இதுவே உலகின் பழமையான பங்குச் சந்தையாகும்.
அ) இலண்டன் பங்குச்சந்தை ஆ) பம்பாய் பங்குச்சந்தை
இ) தேசிய பங்குச்சந்தை ஈ) ஆம்ஸ்டர்டாம் பங்குச்சந்தை

8) இந்தியாவில் இந்தியப் பத்திரங்கள் மற்றும் பரிமாற்ற வாரியம் (SEBI) தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு ............
அ) 1988 ஆ) 1992 இ) 1995 ஈ) 1998

9) திட்டமிடல் என்பது ............ செயல்பாடு ஆகும்.
அ) தேர்ந்தெடுக்கப்பட்ட ஆ) பரவலான / ஊடுருவலான
இ) அ மற்றும் ஆ இரண்டும் ஈ) மேற்கூறிய எதுவும் இல்லை

10) ஆட்சேர்ப்பு என்பது ............ அடையாளம் காண்பதற்கான செயல்முறை ஆகும்.
அ) சரியான வேலைக்கு சரியான நபர் ஆ) நன்கு செயலாக்குபவர்
இ) சரியான வேலை ஈ) மேற்கூறிய எதுவும் இல்லை

11) முதலில் வேலை அடுத்து மனிதர் என்பது ஒரு ............ கோட்பாடு.
அ) சோதனை ஆ) நேர்காணல் இ) பயிற்சி ஈ) பணியமர்த்தல்

12) பணி வழியற்ற பயிற்சி எங்கு அளிக்கப்படுகிறது?
அ) வகுப்பறையில் ஆ) வேலையில்லா நாட்களில்
இ) தொழிற்சாலைக்கு வெளியே ஈ) விளையாட்டு மைதானத்தில்

13) பண்டங்கள் மற்றும் பணிகளை பணத்தின் அடிப்படையில் மாற்றம் செய்பவர் எவ்வாறு அழைக்கப்படுகிறார்?
அ) விற்பனையாளர் ஆ) வாடிக்கையாளர் இ) சந்தையிடுகையாளர் ஈ) மேலாளர்

14) சந்தையில் உயர்நிலையில் இருப்பவர் யார்?
அ) வாடிக்கையாளர் ஆ) விற்பனையாளர்
இ) மொத்த விற்பனையாளர் ஈ) சில்லறை விற்பனையாளர்

15) கீழ்க்கண்டவற்றுள் கண்ணுக்கு புலப்படாத பொருள் எது?
அ) கல்வி ஆ) கைபேசி இ) ஆடைகள் ஈ) வாகனங்கள்

16) சமூக சந்தைப்படுத்துதல் என்பது ............யுடன் தொடர்புடையது.
அ) சமூகம் ஆ) சமூக வகுப்பு இ) சமூக மாற்றம் ஈ) சமூக தீமை

17) நுகர்வோர் இயக்கத்தின் தந்தை யார்?
அ) மகாத்மா காந்தி ஆ) ஜான். எப். கென்னடி
இ) ரால்ப் நேடர் ஈ) ஜவஹர்லால் நேரு

Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



18) பொருட்கள் விற்பனைச் சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு .............
அ) 1962 ஆ) 1972 இ) 1930 ஈ) 1985

19) ............. என்பவர் நவீன சந்தையியலின் மன்னர் ஆவார்.
அ) நுகர்வோர் ஆ) மொத்த வியாபாரி
இ) உற்பத்தியாளர் ஈ) சில்லறை வியாபாரி

20) நுகர்வோரின் உரிமைகள் அவர்கள் கொண்டுள்ள நிலையில் ............. ஆகும்.
அ) அளவீடுகள் ஆ) விற்பனை அதிகப்படுத்துதல் இ) பொறுப்புகள் ஈ) கடமைகள்

## பகுதி - II

ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். கேள்வி எண் 30 கட்டாய வினா. 7×2=14

21) மேலாண்மைக் கருவிகளைப் பட்டியலிடுக.
22) மேலாண்மையின் துணைப் பணிகளை பட்டியலிடுக.
23) முக்கிய முடிவுப் பகுதிகள் (KRA) என்பது என்ன?
24) அமைப்பு நிறுவனங்களின் கூறுகள் யாவை?
25) OTCEI - சிறுகுறிப்பு வரைக.
26) ஏலமிடுதல் என்பதன் பொருள் யாது?
27) இந்தியாவில் உள்ள ஏதேனும் 4 பங்குச் சந்தைகளை பற்றி எழுதுக.
28) பல்வேறு அடையாள ஆதாரங்கள் யாவை? (ஏதேனும் 4)
29) மனிதவள மேலாண்மையின் இயல்புகளில் ஏதேனும் இரண்டு கூறுக.
30) ஆட்சேர்ப்பு முறையில் வேட்டையாடுதல் என்றால் என்ன?

## பகுதி - III

ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். கேள்வி எண் 40 கட்டாய வினா. 7×3=21

31) செயற்கைப் பற்றாக்குறை என்றால் என்ன?
32) கருவூல இரசீதுகளின் வகைகளை விவரி. (ஏதேனும் 3)
33) காளை மற்றும் கரடி - விளக்குக.
34) புறத்தோற்றமற்ற பத்திரங்கள் என்றால் என்ன?
35) மனித வளங்களின் இயல்புகள் யாவை? (ஏதேனும் 3)
36) மன அழுத்த நேர்காணல் என்றால் என்ன?
37) இரண்டாம் நிலைச்சந்தை - சிறுகுறிப்பு வரைக.
38) தனியிடச்சந்தை பற்றி விளக்குக.
39) மேலாண்மையை நிர்வாகத்திலிருந்து வேறுபடுத்துக. (ஏதேனும் 3)
40) பணச்சந்தையில் ஈடுபடும் பங்கேற்பாளர்கள் யாவர்? (ஏதேனும் 3)

## பகுதி - IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்: 7×5=35

41) அ) நவீன மேலாண்மைக் கோட்பாடுகளை விவரி. (ஏதேனும் 5) (அல்லது)
ஆ) செபியின் பணிகளை விவரி. (ஏதேனும் 5)

42) அ) விதிவிலக்கு மேலாண்மையின் நன்மைகள் யாவை? (ஏதேனும் 5) (அல்லது)
ஆ) முதல் நிலைச் சந்தை மற்றும் இரண்டாம் நிலைச் சந்தைக்கும் இடையேயான வேறுபாடுகளை விளக்குக. (ஏதேனும் 5)

43) அ) மேலாண்மையின் பல்வேறு பணிகளை விளக்குக. (ஏதேனும் 5) (அல்லது)
ஆ) பயிற்சியின் பல்வேறு முறைகளை விவரி. (ஏதேனும் 5)

44) அ) சந்தையிடுகை கலவையின் கூறுகளை குறிப்பிடுக. (அல்லது)
ஆ) நுகர்வோரின் கடமைகளை விளக்குக. (ஏதேனும் 5)

45) அ) பணி வழி பயிற்சிக்கும், பணி வழியற்ற பயிற்சிக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை? (ஏதேனும் 5) (அல்லது)
ஆ) ஆட்சேர்ப்பு முறையில் உள்ள அகவளங்களை விளக்குக. (ஏதேனும் 5)

46) அ) நுகர்வோர் எவ்வாறு சுரண்டப்படுகிறார்கள்? (ஏதேனும் 5) (அல்லது)
ஆ) மின் சந்தையிலிருந்து பாரம்பரிய சந்தையிடுகை எவ்வாறு வேறுபடுகிறது? விளக்குக.

47) அ) குறியிலக்கு மேலாண்மையின் முக்கிய நன்மைகள் யாவை? (ஏதேனும் 5) (அல்லது)
ஆ) ஆட்சேர்ப்பு முறைக்கும் தேர்ந்தெடுத்தலுக்கும் இடையே உள்ள வேறுபாடுகளை விவரி.

-------------

Scanned with CamScanner

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com